# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2022

## வளர்தமிழ் 10

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. கோ என்ற எழுத்தின் மாத்திரை

அ) 1 ☐ ஆ) 2 ☐

இ) 1/2 ☐ ஈ) $1^{1/2}$ ☐

2. கடையெழு வள்ளல்களில் ஒருவர்

அ) கபிலர் ☐ ஆ) பொன்முடியார் ☐

இ) பாரி ☐ ஈ) குமணன் ☐

3. பெயரெச்ச விகுதி

அ) அ ☐ ஆ) க ☐

இ) உ ☐ ஈ) அன் ☐

4. தென்னிந்திய நடுகற்கள் என்ற நூலை எழுதியவர்

அ) கேசவராசு ☐ ஆ) தேவநேயப்பாவாணர் ☐

இ) வீராமமுனிவர் ☐ ஈ) ஆறுமுகநாவலர் ☐

5. அடியற்ற மரம் போல என்பது

அ) இணைமொழி ☐ ஆ) உவமைத்தொடர் ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) இரட்டைக்கிளவி ☐

6. வட்டுக்கோட்டைத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட ஆண்டு

அ) 1981 ☐ ஆ) 1956 ☐

இ) 1958 ☐ ஈ) 1976 ☐

7. முதல்வரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. இச்சொல்லியம்

அ) செய்வினை ☐ ஆ) செயப்பாட்டுவினை ☐

இ) ஏவல்வினை ☐ ஈ) அஃறிணை ☐

8. மலையகப்பகுதியில் வாழுகின்ற மக்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வந்தவர்கள்

அ) ஆங்கிலேயர் ☐ ஆ) ஒல்லாந்தர் ☐

இ) போர்த்துக்கேயர் ☐ ஈ) சிங்களவர் ☐

9. தொடர்மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) கீழ்வானம் ☐ ஆ) மண் ☐

இ) நீர் ☐ ஈ) அந்தமான் ☐

10. கடற்கலம் செலுத்துவோனை ________ என்று அழைப்பர்.

அ) பாகன் ☐ ஆ) வலவன் ☐

இ) ஓட்டுநர் ☐ ஈ) மீகாமன் ☐

11. ஏ என்ற ஓர் எழுத்துச் சொல் குறிப்பது

அ) வில்லை ☐ ஆ) அம்பை ☐

இ) தலைவனை ☐ ஈ) கணவனை ☐

12. பொருண்மியம் நோக்கிய புலப்பெயர்வு ________நூற்றாண்டில் இடம்பெற்றது.

அ) 10 ஆம் ☐ ஆ) 19 ஆம் ☐

இ) 20 ஆம் ☐ ஈ) 12 ஆம் ☐

13. இளவேனில் என்பது

அ) இடப்பெயர் ☐ ஆ) குணப்பெயர் ☐

இ) சினைப்பெயர் ☐ ஈ) காலப்பெயர் ☐

14. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் தலை என்ற குறளில் ஓம்பல் என்பதன் பொருள்

அ) வாழ்த்துதல் ☐ ஆ) தூற்றுதல் ☐

இ) பேணுதல் ☐ ஈ) கற்றல் ☐

15. தென்னையின் தொகுதியைக் குறிக்கும் மரபுப்பெயர்

அ) கூட்டம் ☐ ஆ) காடு ☐

இ) தோப்பு ☐ ஈ) வரிசை ☐

16. விரைப் பொருட்களில் ஒன்று

அ) அகில் ☐ ஆ) தேன் ☐

இ) மருப்பு ☐ ஈ) கடுகு ☐

17. கரணியம் தெரியாமல் வழங்கி வரும் பெயர்

அ) இடுகுறிப்பெயர் ☐ ஆ) காரணப்பெயர் ☐

இ) சிறப்புப்பெயர் ☐ ஈ) காலப்பெயர் ☐

18. பெருவங்கியம் என அழைக்கப்படும் இசைக்கருவி

அ) மேளம் ☐ ஆ) தாளம் ☐

இ) வயலின் ☐ ஈ) ஏழில் ☐

19. வினையடியுடன் வி,பி, பிவி என்னும் விகுதிகள் சேரும்போது தோன்றுவது

அ) தன்வினை ☐ ஆ) பிறவினை ☐

இ) எச்சவினை ☐ ஈ) குறிப்புவினை ☐

20. வடதிசை மன்னரின் செருக்கை அடக்கிய சேர மன்னன்

அ) நரசிம்மபல்லவன் ☐ ஆ) இராசராசசோழன் ☐

இ) செங்குட்டுவன் ☐ ஈ) இளங்கோ ☐

21. நிறைகுடம் தளம்பாது என்ற பழமொழியின் கருத்து

அ) முயற்சியின் பயன் ☐ ஆ) அறிவின் அடக்கம் ☐

இ) வினைவிடாது ☐ ஈ) ஒற்றுமை ☐

22. கடைசிக் கடற்கோளின்போது ஆற்றிடைக் குறையாக இருந்தது

அ) இந்தியா ☐ ஆ) சீனா ☐

இ) இலங்கை ☐ ஈ) மலேசியா ☐

23. வினையாலணையும் பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) செதுக்கியவன் ☐ ஆ) பாடினான் ☐

இ) நடந்தன ☐ ஈ) செதுக்கினான் ☐

24. வில்லுப்பாட்டில் இசைக்கப்படும் வில் ________ மரத்தினால் செய்யப்படுகிறது.

அ) குமிழ ☐ ஆ) மூங்கில் ☐

இ) முதிரை ☐ ஈ) வாகை ☐

25. பலாவின் பிஞ்சுக்குரிய மரபுப்பெயர்

அ) நுங்கு ☐ ஆ) மூசு ☐

இ) வடு ☐ ஈ) கச்சை ☐

26. நெடுஞ்சேரலாதன் இமயத்தில் நாட்டியகொடி

அ) மீன்கொடி ☐ ஆ) விற்கொடி ☐

இ) புலிக்கொடி ☐ ஈ) வீணைக்கொடி ☐

27. மாற்றமின்றி இயல்பாகப் புணருவது

அ) கெடுதற்புணர்ச்சி ☐ ஆ) தோன்றற்புணர்ச்சி ☐

இ) இயல்புப்புணர்ச்சி ☐ ஈ) திரிதற்புணர்ச்சி ☐

28. வினாப்பொருளைத் தரும் சொல்லியத்தின் நிறுத்தற்குறி

அ) வியப்புக்குறி ☐ ஆ) வினாக்குறி ☐

இ) ஒற்றைமேற்கோட்குறி ☐ ஈ) இரட்டைமேற்கோட்குறி ☐

29. பொம்மைக் கடைகளில் அழகான பொம்மைகள் காணப்படுகின்றன.

இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள அடைமொழி

அ) அழகான ☐ ஆ) பொம்மை ☐

இ) கடைகளில் ☐ ஈ) காணப்படுகின்றன ☐

30. உவமைத்தொகையின் உருபுகள்

அ) ப்,வ் ☐ ஆ) போல,போன்ற ☐

இ) ஆகிய,என ☐ ஈ) கிறு, கின்று ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கல்வி கற்கும் மாணவர்களாகிய நாம் ஒழுக்கத்தையும் கல்வியையும் இரு கண்களாக மதித்து வாழ்க்கையில் சிறப்புற வேண்டும். ஒழுக்கத்தைப் பேணிக் காக்க வேண்டும். ஒழுக்கம் என்பது சாட்சிகள் இல்லாத இடத்திலும் தவறிழைக்காமல் நேர்மையாக நடப்பதாகும். இதை நம் முன்னோர் பட்டறிவுகள் மூலம் உணர்த்திச் சென்றுள்ளனர். மாணவர்களாகிய நாம் நேர்மையுடன் குமுகப் பொறுப்புக் கொண்டவராக வளர வேண்டும். ஆசிரியர்கள், பெரியோர்கள் வழிகாட்டும் பழக்க வழக்கங்களைப் பின்பற்றிச் சிறந்த சிந்தனை கொண்டவராகச் செயற்பட வேண்டும். அறநெறிகளை நமக்கு வலியுறுத்தும் நோக்குடன் நம் சான்றோர்கள் இயற்றிய அறநூல்கள் பல உள்ளன. இவற்றில் திருக்குறள் தமிழர்களின் ஒழுக்க நெறிகளைப் பறைசாற்றும் ஒப்பில்லா நூலாகப் புகழப்படுகிறது. நாம் பாடங்களில் கற்கும் நற்கருத்துகளைத் தேர்வு முடிந்தவுடன் மறந்து விடுதல்கூடாது. நாட்டுப்பற்றையும் வளர்த்து அனைவரையும் மதித்து கற்ற நெறிப்படி நடக்க வேண்டும். இதையே வள்ளுவர், ''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்று தெளிவாக எடுத்துரைக்கின்றார். நாம் தொலைபேசி, தொலைக்காட்சி போன்றவற்றில் நம் காலத்தை வீணடிக்காமல் உயிரினும் மேலான ஒழுக்கத்தையும் அறிவூட்டும் கல்வியையும் கற்று நன்னெறிகளை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வோம்.

1. மாணவர்களாகிய நாம் எவற்றை இரு கண்களாக மதித்து நடக்க வேண்டும்?

______________________________________________

______________________________________________

2. ஒழுக்கம் என்பது என்ன?

______________________________________________

______________________________________________

3. திருக்குறள் எவற்றைப் பறைசாற்றுகின்றது?

______________________________________________

______________________________________________

4. எம் காலத்தை வீணடிப்பவை எவை?

______________________________________________

______________________________________________

5. யார் வழிகாட்டும் பழக்கவழக்கங்களைப் பின்பற்ற வேண்டும்?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. இயற்கைத்தாயின் இன்ப அணைப்பை இனியபாவால் எம்முன் நிறுத்திய கவிஞர் யார்?

___

2. நடுகல்லை வேறு எப்படி அழைப்பர்?

___

3. இந்திய அமைதிப்படைக்கு எதிராக உண்ணாநோன்பு இருந்து உயிர்துறந்தோர் யாவர்?

___

4. வில் எந்நிலத்துக்குரிய போர்க்கருவியாகும்?

___

5. சிங்களம் மட்டும் ஆட்சி மொழி என்ற சட்டம் இலங்கையில் கொண்டுவரப்பட்ட ஆண்டு எது?

___

6. "பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி ..." என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

___

7. விடுதலையின் பின் இலங்கையரசு கொண்டுவந்த மிகக் கொடுமையான சட்டம் எது?

___

| புள்ளிகள் 10 |
| --- |

**4. பின்வரும் கவிதைத் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. அறிவை வளர்த்த ஆசிரியரே - எமை
   அன்புடன் வழி நடத்தியவரே!

2. என்னைத் தாலாட்டிய மொழி
   என் இனிய தாய்மொழி

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

வினையெச்சம் ____________________

முன்னிலை ____________________

உரிச்சொல் ____________________

2. பிரித்து எழுதுக.

வில்லிசை ____________________

பதினெட்டு ____________________

எழுத்தறிவு ____________________

3. பின்வரும் உவமையணிகளை உருவக அணிகளாக மாற்றுக.

முத்துப்பல் ____________________

கயல்விழி ____________________

தேன்மொழி ____________________

4. பின்வரும் சொற்கள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

பார்த்துப்பார்த்து ________________________________________

நடுநடுங்கி ________________________________________

5. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

குணவாகுபெயர் ________________________________________

சினையாகுபெயர் ________________________________________

புள்ளிகள் 15

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.**

1. இருபதாம் நூற்றாண்டின் பின் __________________ பெரும் வளர்ச்சியடைந்துள்ளது.

   ( ஊடகத்துறை, ஊடகத்துரை )

2. ஒவ்வொரு __________________ தமிழ்க்கல்வி தொடர வழி செய்ய வேண்டும்.

   ( தலைமுறையினரும், தளைமுறையினரும் )

3. சொல்லாமலே செய்யும் பெரியோர் __________________ ஒப்பானவர்.

   ( பலாமரத்துக்கு, பழாமரத்துக்கு )

4. ஈழத்தந்தை செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற __________________ தமிழர் உரிமைகள் பற்றிப் பேசப்பட்டது.

   ( மானாட்டில், மாநாட்டில் )

5. யாழ் நூலக எரிப்பு __________________ தீராத வலியைத் தந்தது.

   ( தமிழினத்துக்கு, தமிழிணத்துக்கு )

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- நடுகல்
- தமிழர் புலப்பெயர்வும் இடப்பெயர்வும்
- வாசிப்பு
  - வாசித்தலின் இன்றியமையாமை
  - வாசித்தலினால் ஏற்படும் நன்மை
  - வாசிப்புப் பழக்கம் குறைந்துள்ளமைக்கான காரணங்கள்
  - வாசித்தலைத் தூண்டும் வழிவகைகள்
- சூழல்மாசடைதல்
  - சூழலைப் பாதிக்கும் கரணியங்கள்
  - சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அகத்தியம்
  - சூழலைப் பாதுகாக்கும் வழிமுறைகள்

புள்ளிகள் 20